பாலகிருஷ்ணா ரெட்டி அணி மாறினார்

எடப்பாடியுடன் வேலுமணி ஆதரவு அணி சமரச பேச்சு

மீண்டும் மாவட்ட செயலாளர் பதவி கொடுத்தால் போதும் என கோரிக்கை

சென்னை, மே 27: தவெகவுக்கு போக முயற்சித்தது எஸ்.பி. வேலுமணி அணி. ஆனால் அவர்களின் கட்சி பதவிகளை நீக்கி, சபாநாயகரிடம் புகார் அளித்தார் எடப்பாடி பழனிசாமி. மேலும் தவெக அமைச்சரவையிலும் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்தனர். இந்நிலையில் எஸ்.பி.வேலுமணி, எடப்பாடியுடன் மோதல் போக்கு என்பது இல்லை என்று திடீரென பல்டி அடித்தார்.இதனால் எஸ்.பி.வேலுமணி தலைமையிலான அதிமுக அதிருப்தி எம்.எல்.ஏ.,க்கள் எடப்பாடியுடன் மீண்டும் சேர உள்ளார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், நேற்று முன்தினம் எஸ்.பி.வேலுமணியின் ஆதரவு எம்எல்ஏக்களான மதுராந்தகம் தொகுதி மரகதம் குமரவேல், பெருந்துறை ஜெயக்குமார், தாராபுரம் சத்யபாமா ஆகியோர் தங்கள் பதவியை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்தனர். இது எஸ்.பி.வேலுமணி தரப்புக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதே நேரத்தில் எஸ்.பி.வேலுமணி சி.வி.சண்முகத்தின் ஆதரவாளரான ஆற்காடு எம்.எல்.ஏ சுகுமார், அந்தியூர் ஹரிபாஸ்கர், பண்ருட்டி கே.மோகன், சங்கரன்கோவில் திலீபன் ஜெயசங்கர், காங்கேயம் என்.எஸ்.என். நடராஜன் ஆகிய 5 எம்எல்ஏக்கள் எடப்பாடியை சந்தித்து பேசி ஆதரவு தெரிவித்தனர். இந்த பரபரப்புக்கு மத்தியில் நேற்று ஒரு எம்எல்ஏ ராஜினாமா செய்தார்.

அதாவது எஸ்.பி.வேலுமணி தரப்பு எம்எல்ஏவான அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையாவும் ராஜினாமா செய்தார். தொடர்ந்து அவர் தவெகவில் இணைந்தார். மேலும் 6 எம்எல்ஏக்களும் தங்களுடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படி ஆதரவு எம்எல்ஏக்கள் அடுத்தடுத்து தவெகவிற்கு தாவி வருவது எஸ்.பி.வேலுமணி தரப்புக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நேற்று மாலையில் சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள இல்லத்தில் எடப்பாடியை சந்தித்து எஸ்.பி.வேலுமணி தரப்பு எம்எல்ஏ பாலகிருஷ்ண ரெட்டி ஆதரவு தெரிவித்தார். அவரை தொடர்ந்து எஸ்.பி.வேலுமணி தரப்பு ஆதரவு எம்எல்ஏக்களான நத்தம் விஸ்வநாதன், ஹரி, அருண்மொழி தேவன், ரவி மனோகரன் மற்றும் தங்கமணி ஆகியோர் சந்தித்து பேசினர். அப்போது இரு அணிகளும் இணைவது தொடர்பாக சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. அப்போது பதவி பறிக்கப்பட்ட அனைவருக்கும் மீண்டும் அதே பதவி வழங்கப்படும். வழிகாட்டு குழு என்பது அமைக்கப்படாது. தோல்வி குறித்து ஆராய குழு அமைக்கப்படும். பொதுக்குழுவை கூட்ட வலியுறுத்தக்கூடாது. தேவை ஏற்படும் போது மட்டுமே பொதுக்குழு கூட்டப்படும் என்று எடப்பாடி தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இதனை எஸ்.பி.வேலுமணி தரப்பு ஏற்றுக்கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. விரைவில் அவர்கள் எடப்பாடியுடன் இணைவார்கள் என்று கூறப்படுகிறது.

விவசாயிகள் பயிர் கடன் தள்ளுபடி ஏமாற்றம் அளிக்கிறது

கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் விவசாயிகளின் துயரங்களை குறைக்காது

அரசியல் கட்சி தலைவர்கள் கண்டனம்

சென்னை, மே 27: விவசாயிகள் பயிர் கடன் தள்ளுபடி ஏமாற்றம் அளிக்கிறது. கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் விவசாயிகளின் துயரங்களை இது குறைக்காது என அரசியல் கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழக முதல்வர், விவசாயிகள் சாகுபடி செலவின வகைக்காக கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள பயிர்கடன்களில் ரூ.50 ஆயிரம் வரையான கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்துள்ளார். இது தலைமுறை, தலைமுறையாக கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் விவசாயிகளின் துயரங்களை குறைக்காது.

தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், "5 ஏக்கருக்கும் குறைவான நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர் கடன்கள் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும்" என வழங்கியுள்ள உறுதி மொழிக்கும் மாறானது. இதை கருத்தில் கொண்டு தேர்தல் வாக்குறுதிப்படி 5 ஏக்கருக்கும் குறைவான நிலம் உள்ள விவசாயிகளின் பயிர் கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்து, மறு உத்தரவு வழங்க வேண்டும்.

பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட் மாநில செயலாளர்): விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பான அறிவிப்பை முதல்வர் விஜய் வெளியிட்டுள்ளார். தேர்தலில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக 5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி, 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு 50 சதவிகித கடன் தள்ளுபடி செய்யப்படும் என்ற தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டிடிவி.தினகரன் (அமமுக பொதுச்செயலாளர்): ஐந்து ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன்கள் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும் என தேர்தலுக்கு முன்பாக வாக்குறுதியளித்த தவெக ஆட்சிக்கு வந்தவுடன் விவசாயிகள் பெற்ற கடன் தொகைக்கு ஏற்ப தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்திருப்பது ஒட்டுமொத்த குறு சிறு விவசாயிகளுக்கும் இழைக்கப்பட்ட துரோகம். தமிழகம் முழுவதும் 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்துள்ள குறு சிறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்.

முகமது முபாரக் (எஸ்டிபிஐ மாநில தலைவர்): தேர்தல் வாக்குறுதியில் விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக் கடன் முழுமையாக ரத்து செய்யப்படும் என அறிவித்துவிட்டு, தற்போது விவசாயிகளை தரம் பிரித்து, விகிதாச்சார அடிப்படையில் கடன் தள்ளுபடி செய்திருப்பது ஒட்டுமொத்த விவசாயிகளையும் ஏமாற்றும் செயலாகும். இந்த அறிவிப்பை தமிழக முதல்வர் விஜய் உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு ஜூன் மாதத்திற்கான

9.91 டி.எம்.சி நீர் வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிட வேண்டும்

காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டத்தில் வலியுறுத்தல்

சென்னை, மே 27: டெல்லியில் காவிரி நீர் மேலாண்மை ஆணைய 51வது கூட்டம், தலைவர் ஹல்தார் தலைமையில் நேற்று நடந்தது. தமிழ்நாடு சார்பில் நீர்வளத்துறை செயலாளர் மற்றும் உறுப்பினர் சத்யபிரதா சாகு, தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டார்.

இதில், தமிழ்நாடு உறுப்பினர், தற்பொழுது மேட்டூர் அணையின் நீர் இருப்பு 40.742 டி.எம்சி. அணையிலிருந்து வினாடிக்கு 1003 கன அடி நீர் குடிநீர், தொழிற்சாலை பயன்பாட்டிற்கும் மற்றும் சுற்றுச்சூழல் நீர் ஓட்டத்திற்காகவும் திறந்துவிடப்படுகிறது. நடப்பு நீர்பாசன ஆண்டில் (2025-26) 2025, ஜூன் 1 முதல் 2026, மே 24ம் தேதி வரை பில்லிகுண்டுலுவில் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நீரின் அளவான 176.685 டி.எம்.சிக்கு பதிலாக மிகை நீர் உள்பட கிடைக்கப்பெற்ற நீரின் அளவு 329.166 டி.எம்சி. இதனை சுட்டிக்காட்டி, கர்நாடக உறுப்பினர், கர்நாடகம் அளித்த மிகை நீரையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்ததை, ஏற்றுக்கொள்ள இயலாது என்றும் கர்நாடகம் அதன் நீர்த்தேக்கத்தில் தேக்க முடியாமல் வெளியேற்றிய நீரினை அது சொந்தம் கொண்டாட முடியாது என்றும் தமிழக உறுப்பினர் வலியுறுத்தினார்.

இந்திய வானிலை ஆராய்ச்சி மைய அறிக்கையின்படி 2026 மே 26 அன்று தென்மேற்கு பருவமழை கேரளாவில் துவங்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. பருவமழை இயல்பான அளவாக இருக்கும் என்ற கருத்தின்படியும், கர்நாடக அணைகளின் நீர் வரத்தை கருத்தில் கொண்டும் தமிழகத்திற்கு ஜூனில் வழங்கப்பட வேண்டிய 9.91 டி.எம்.சி நீரை உச்ச நீதிமன்ற ஆணையின்படி கர்நாடகம் பில்லிகுண்டுலுவில் உறுதிசெய்யுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்தினார்.

எம்எல்ஏக்கள் ராஜினாமா கடிதத்தை பரிசீலனை செய்வது என் வேலை

சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தகவல்

சென்னை,மே27; சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா கடிதம் முறையாக கொடுத்தால் அதனை பரிசீலனை செய்வது என் வேலை என சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் கூறினார்.

சென்னை தலைமை செயலகத்தில் நிருபர்களை சந்தித்து சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் கூறியதாவது: அதிமுக சார்பில் கொடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா கடிதத்தை பரிசீலனை செய்யும் அதிகாரம் எனக்கு உள்ளது. அதனை ஆய்வு செய்த பின் ஏற்றுக்கொள்ளப்பட்டது குறித்து அறிவிப்பேன். அதிமுக தரப்பில் கூறும் கருத்துகள் அவர்களது சொந்த கருத்து. விதிகளுக்கு உட்பட்டு சபாநாயகர் உரிமையோடு அறிவிப்பேன். சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா கடிதம் முறையாக கொடுத்தால் அதனை பரிசீலனை செய்வது என் வேலை. யாரையும் பழி வாங்கும் இடம் சட்டமன்ற அலுவலகமோ, சபாநாயகர் அலுவலகமோ கிடையாது. யார் மீதும் விருப்பு வெறுப்போ எனக்கு கிடையாது. சட்ட விதிகளுக்கு உட்பட்டே அதிமுக எம்எல்ஏக்களின் ராஜினாமா கடிதம் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க சபாநாயகரின் சட்ட விதிகளின்படியே நடவடிக்கை எடுத்தேன். எடப்பாடி பழனிசாமி தரப்பினர் வழங்கிய மனு மீது முறையாக நடவடிக்கை எடுக்க சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதே தவிர மனுவை ஒதுக்கவில்லை. தவெக அரசுக்கு ஆதரவு கூடுகிறதா குறைகிறதா என்பதை கவனிப்பது எனது வேலை அல்ல, எனது வேலை எண்ணிக்கையை சரி பார்ப்பது மட்டுமே.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்பாவி மக்களை ஏமாற்றுமளவிற்கு

முதல்வர் பதவி மீது உங்களுக்கு அப்படி என்ன வெறி

விஜய்க்கு நயினார் நாகேந்திரன் கேள்வி

சென்னை, மே 27: மக்களை ஏமாற்றுமளவிற்கு முதல்வர் பதவி மீது உங்களுக்கு அப்படியென்ன வெறி என்று விஜய்க்கு நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் தனது சமூக வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:

விவசாயிகளை நம்ப வைத்து ஏமாற்றிய ஜோசப் விஜய் அவர்களே. ஆட்சிக்கு வந்தால் 5 ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் 100% பயிர்க்கடன் ரத்து என்று கூறிவிட்டு, தற்போது வெறும் ₹50,000 பயிர்க்கடன் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மட்டுமே 100% கடன் தள்ளுபடி செய்துள்ளீர்களே, இது அப்பட்டமான நம்பிக்கை துரோகமில்லையா?.

இதேபோல தான் தேர்தலின் போது அனைவருக்கும் 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று கூறிவிட்டு, ஆட்சிக்கு வந்தவுடன் 500 யூனிட்டிற்குகீழ் உபயோகித்தால் மட்டுமே என "இக்" வைத்தீர்கள். எதற்கு இத்தனை பித்தலாட்டங்கள்? இத்தனை பொய் வாக்குறுதிகள்? ஆசை காட்டி அப்பாவி மக்களை ஏமாற்றுமளவிற்கு முதல்வர் பதவி மீது உங்களுக்கு அப்படியென்ன வெறி?. காற்றில் கோட்டை கட்டுவது போல, நீங்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் 99% நிறைவேற்றவே முடியாத வெறும் வாய் வார்த்தைகள் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்.

Government of India
Department of Space
ISRO Propulsion Complex (IPRC)
Mahendragiri P.O., Tirunelveli District, Tamil Nadu– 627 133, India

CORRIGENDUM Dated : 26.05.2026

In continuation of the e-NIT notifications published, the sale period for the work 'Construction of pressure regulation bay & DM water Run tank foundation at TPT for LVM3 Project at IPRC, Mahendragiri. [Civil & Electrical works]. (No.: IPRC/CMG/TD/e-14/MW/CMP-04/2026-27 dated : 07.05.2026) (Estimated cost: ₹32.03 Lakhs) is extended up to 05.06.2026

For eligibility criteria and other details, interested tenderers may please refer to the detailed bilingual (Hindi-English) Notice Inviting Tenders (NIT) on the website https://www.isro.gov.in/Tenders.html and tender free view at https://www.tenderwizard.com/isro

Group Head, CMG

ஓடும் ரயிலில் ரூ.180 கோடி போதைபொருள்

கடத்தல் வழக்கில் சிக்கிய யேசுராஜ் தொடர்பு இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

சட்டவிரோத சொத்து குவிப்பு ஆவணங்கள் சிக்கியதாக தகவல்

சென்னை, மே 27: 2024ல் ஓடும் ரயிலில் ரூ.180 கோடி மதிப்பு போதை பொருள் கடத்திய வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளியே வந்த யேசுராஜ் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

வியாசர்பாடி சாஸ்திரி நகர் 11வது தெருவை சேர்ந்தவர் யேசுராஜ் (35). கடந்த 2024ல் ரயில் மூலம் ரூ.180 கோடி மதிப்பு 30 கிலோ உயர் ரக போதை பொருள் கடத்தியதாக மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அவருடன் சென்னையை சேர்ந்த மோனிஷா ஷீலா உள்ளிட்ட 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு விசாரணை நடத்தி வரும் நிலையில், போதை பொருள் கடத்திய யேசுராஜ் உள்ளிட்ட 3 பேர் பல போடி ரூபாய் சட்ட விரோதமாக சம்பாதித்து பல்வேறு பினாமி பெயர்களில் சொத்துகள் வாங்கி குவித்து இருந்தது தெரிய வந்தது. இதனால் அமலாக்கத்துறை யேசுராஜ் உள்ளிட்டோர் மீது சட்ட விரோத பணப்பரிமாற்றம் சட்டத்தின் கீழ் தனியாக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் சிறையில் இருந்த யேசுராஜ் சில நாட்களுக்கு முன்பு ஜாமீனில் வெளியே வந்துள்ளார். இதையடுத்து, அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று காலை ஒரே நேரத்தில் வியாசர்பாடியில் உள்ள யேசுராஜ் வீடு மற்றும் அவரது நெருங்கிய தொடர்பு கொண்ட கொடுங்கையூர் திருவள்ளுவர் நகர் 8வது லேன் பகுதியில் உள்ள ஜான் பிரிட்டோ வீடு, கொடுங்கையூர் அபிராமி அவென்யூ பகுதியை சேர்ந்த பிலோமன் பிரகாஷ் என்பவரின் வீட்டில் சிஆர்பிஎப் வீரர்கள் உதவியுடன் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையின் போது, போதை பொருள் விற்பனை மூலம் சம்பாதித்த பல கோடி மதிப்புள்ள சொத்து பத்திரங்கள், வங்கி கணக்கு விவரங்கள், பினாமிகள் பெயரில் வாங்கிய சொத்து ஆவணங்கள், டிஜிட்டல் ஆவணங்கள் பறிமுதல் செய்து விசாரணை நடத்தினர்.

மேலும், சர்வதேச போதை பொருள் கடத்தல் கும்பலின் வங்கி கணக்கு விவரங்கள் பல சிக்கியதாக கூறப்படுகிறது. அந்த விவரங்களை வைத்து யேசுராஜிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். 3 இடங்களிலும் நள்ளிரவு வரை இந்த சோதனை நீடித்தது.

பள்ளிகள் திறப்பு தேதி, கிழமை அறிவிப்பில் குழப்பம்

இது தானா உங்க மாற்றம்?

சென்னை, மே 27: தமிழகத்தில் கோடை விடுமுறைக்கு பின் பள்ளிகள் ஜூன் 4ம் தேதி புதன் கிழமை திறக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை நேற்று அறிவிப்பு வெளியிட்டது. ஆனால், ஜூன் 4ம் தேதி வியாழக்கிழமை வருகிறது. செய்திக்குறிப்பில் புதன்கிழமை என தவறாக வெளியிடப்பட்டதால், பள்ளிகள் 4ம் தேதி திறப்பா அல்லது முன்னதாக புதன்கிழமை திறப்பா என்று பெற்றோர்கள் மத்தியில் குழப்பதை ஏற்படுத்தியது. இத்தகவல் சமூக வலைதளங்களில் கேலி கிண்டலுக்கு ஆளான நிலையில் மீண்டும் திருத்த அறிக்கை வெளியிடப்பட்டது. புதன்கிழமையை வியாழக்கிழமை என மாற்றிக்கொள்ளவும் என அதில் தெரிவிக்கப்பட்டது. மாற்றம், மாற்றம் என்று ஆட்சிக்கு வந்த தவெகவினரின் மாற்றம் இது தானா என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பா.ஜ. கவுன்சிலர் வீட்டில் ஜெலட்டின் குச்சிகள் பறிமுதல்

மார்த்தாண்டம், மே 27: குமரி மாவட்டம் களியக்காவிளை அருகே திருத்துவபுரம் பகுதியை சேர்ந்தவர் குணசீலன் (52). களியக்காவிளை பேரூராட்சி 14-வது வார்டு பாஜ கவுன்சிலராக உள்ளார். அதே பகுதியில் இவருக்கு சொந்தமாக பெட்டிக்கடை, பாறை உடைக்கும் வாகனம், கிணறு தோண்டும் வாகனம் உள்ளது. இந்நிலையில், அவரது பெட்டிக்கடையில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக களியக்காவிளை காவல்நிலையத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் அவரது வீட்டிற்கு சென்று போலீசார் அதிரடியாக சோதனை செய்தனர். அப்போது அவரது வீட்டின் பின்னால் 27 டெட்டனேட்டர்கள், 30 ஜெலட்டின் குச்சிகளை சட்டவிரோதமாக பதுக்கிவைத்து இருந்தது கண்டறியப்பட்டது.

உடனே அவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் கவுன்சிலர் குணசீலன் மற்றும் வெடி பொருட்களை விற்பனை செய்த பனச்சமூடு பகுதியை சேர்ந்த ராஜன் (75) ஆகிய 2 பேரை கைது செய்தனர். பின்னர் அவர்களை ஜாமீனில் விடுதலை செய்தனர்.

தூய்மையான ஆட்சியை தருவோம் என கூறி விட்டு

குதிரை பேரத்தில் தவெக அரசு ஈடுபடுகிறது

சபாநாயகரை நேரில் சந்தித்த பின்னர் அதிமுக எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேட்டி

▶ தவெக அரசு குதிரை பேரத்தில் ஈடுபடுவதாக குற்றம்சாட்டி, தலைமை செயலகத்தில் சபாநாயகர் ஜேசிடி.பிரபாகரை நேற்று சந்தித்து, அதிமுக எம்எல்ஏக்கள் ராஜினாமா கடிதத்தை ஏற்க கூடாது என அக்ரி கிருஷ்ணமூர்த்தி எம்எல்ஏ மனு அளித்தார்.

சென்னை மே 27: தூய்மையான ஆட்சியை தருவோம் என கூறி விட்டு குதிரை பேரத்தில் தவெக அரசு ஈடுபடுகிறது என்று சபாநாயகரை நேரில் சந்தித்த பின்னர் அதிமுக எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்ட எம்எல்ஏக்கள் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), ஜெயக்குமார் (பெருந்துறை), சத்யபாமா (தாராபுரம்) ஆகிய 3 பேரும் தங்களின் பதவியை நேற்று முன்தினம் ராஜினாமா செய்தனர். இந்த நிலையில் நம்பிக்கை வாக்கெடுப்பின் போது தவெகவிற்கு ஆதரவு அளித்த 3 அதிமுக எம்எல்ஏக்களின் ராஜினாமாவை ஏற்கக்கூடாது என்று எடப்பாடி அணியினர் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரிடம் இன்று நேரில் முறையிட்டனர். தொடர்ந்து எடப்பாடி அணியை சேர்ந்த அக்ரி கிருஷ்ண மூர்த்தி அளித்த பேட்டி:

தவெக அரசின் நம்பிக்கை தீர்மானத்தின் போது அதிமுக எம்எல்ஏக்களை எதிர்த்து வாக்களிக்க எடப்பாடி உத்தரவிட்டார். ஆனால் தவெகவுக்கு ஆதரவாக வாக்களித்த 25 பேர் மீது கட்சித் தாவல் சட்ட நடவடிக்கை எடுக்க பேரவை தலைவரிடம் மனு அளித்தோம். அந்த கடிதம் ஆய்வில் உள்ளதாக பேரவை தலைவர் தெரிவித்தார். இந்நிலையில் மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் பதவியை ராஜினாமா செய்துள்ளனர். ஏற்கனவே அவர்கள் மீது கட்சி தாவல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் அளித்திருக்கும் நிலையில், அது ஆய்வில் உள்ளது. அப்படியிருக்கும் போது அவர்கள் பதவி ராஜினாமா செய்வதை ஏற்றுக்கொண்டது விதிகளுக்கு முரணானது. ராஜினாமா கொடுத்த 5 நிமிடத்தில் மூவருக்கும் லேமினேஷன் செய்யப்பட்ட உறுப்பினர் கார்டுகள் வழங்கப்படுகிறது. இது தலைமை செயலகமா அல்லது தவெக கட்சியின் தலைமை அலுவலகமா என கேள்வி எழுகிறது. இதுபோன்று சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமாவை ஊக்குவிப்பதால் குதிரை பேரம், குதிரை வேகம் அளவுக்கு நடைபெறுகிறது. இதை தடுத்து நிறுத்த அரசு முன்வரவேண்டும். தூய்மையான ஆட்சியை தருவோம் என கூறிய அரசு முறை தவறி பின்வாசல் வழியாக ஆட்சியை நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக குதிரை பேரத்தை நடத்தி கொண்டிருக்கிறது. ராஜினாமா செய்த சட்டமன்ற உறுப்பினர்கள் குதிரை பேரத்தில் ஈடுபட்டு அவர்கள் ராஜினாமா செய்துள்ளனர் இது தான் உண்மை. ராஜினாமா செய்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசிதழ் வெளியிட்டாலும் அதை திரும்ப பெறும் அதிகாரம் பேரவை தலைவருக்கு உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்.

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-A அசையாச் சொத்து(கள்) மின்-ஏலம் பொது விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கி.அ. கோயம்புத்தூர்: 1112, ராஜா பிளாசா, 2 வது தளம், லக்ஷ்மி மில் ஜங்ஷன், கோயம்புத்தூர்–641037.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீட்டோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீட்டோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி **"உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்"** விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீட்டோரின் இணையதளம் அதாவது, www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
NHL/COI/0120/771767 சதிஷ் P / விஜயலக்ஷ்மி S / ஆதிகேசவன் கார்மென்ட்ஸ் கி.அ.: கோயம்புத்தூர்	Rs. 2646805.89 & 14-10-2024	கையக சுவாதீனம்	கதவு எண்.76d/22, மனை எண்.46, T.S.No.26 பகுதி, S.F.No.594/1, கேவிகே நகர், மீளவிட்டான் கிராமம், தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா–628008.	Rs. 70,49,000	Rs. 704900	10-06-2026	Rs. 20,000	02-June-2026,11AM to 5PM	11-June-2026,02Pm to03Pm	அறியப்படாதது

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரபூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **1.** நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பின்என்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் நிரல் எண்– K இல் குறிப்பிடப்பட்ட ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை. **2.** எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனானஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். **3.** கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், விற்பனை உறுதிப்படுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 15 நாட்கள் கட்டாயக் காலம் முடிவடைந்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விற்பனைப் பரிசீலனைத் தொகையின் பகுதிப் பணத்தைப் பறிமுதல் செய்வார், மேலும் சொத்து/கடனீட்டு சொத்து சர்ஃபாசி சட்டத்தின் விதிகளின்படி மறுவிற்பனை செய்யப்படும். **4. M/s. ஃபோர்குளோசர்இந்தியா.காம் மின்-ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் 605 ஏ, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட், ஹைதராபாத்-500038, இணையதளம்-info@bank.eauctions.in இடத்தில் அதன் தலைமை அலுவலகம் கொண்டிருக்கும் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ நபர்களான திரு. ஏங்கெல்ஸ்/ துர்கேஷ்/ ஜோதிகண்ணன்/ ஸ்ரீ சரண், செல்பேசி: 9344007827/ 9042840151/ 9840487424 / 9738931789, கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800 120 8800, மின்னஞ்சல்: auction@pnbhousing.com தொடர்பு கொள்ளவும் அல்லது www.pnbhousing.com -ஐ காணவும்.**

இடம்: தூத்துக்குடி, நாள்: 27-05-2026 **ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**